செ. கு. எண்: 135 நாள் : 09.11.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 9.11.2015

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடிவீஸ்வரம் கிராமத்தைச் சேர்ந்த திரு அப்துல் சாம் என்பவரின் மகன் முகமது மைதீன் என்பவர் 8.11.2015 அன்று நள்ளிரவு பெய்த மழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

9.11.2015 அன்று மழையின் காரணமாக காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், காவம்பயிர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவரின் மனைவி முத்துமாரி என்பவர் வீட்டு சுவர் இடிந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நென்மேலி கிராமத்தில் மழையின் காரணமாக கூரை வீட்டின் மீது மரம் விழுந்ததில், கூரை வீட்டில் இருந்த திரு சின்னசாமி என்பவரின் மகன் வீராசாமி என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், தோனி மேடு கிராமம், பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்த திரு விஜயகுமார் என்பவரின் மனைவி பரிமளா என்பவர் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த கூரை வீட்டின் மீது மழையின் காரணமாக மரம் சாய்ந்து விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், ஜி.ஆர்.பி தெருவைச் சேர்ந்த திரு மகாலிங்கம் என்பவரின் மகன் பாலு என்பவரின் கூரை வீடு மழையின் காரணமாக இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து, மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த இந்த 5 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**